FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319435

1. District : **கடலூர்** மாவட்டம் | PS: **ஊ.த.க. பிரிவு** காவல்நிலையம் | Year: **2026** ஆண்டு | FIR No.: **4/2026** மு.த.அ. எண் | Date: **04.07.2026** நாள்

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** Sections பிரிவுகள்: **7 , 12 r/w 7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் **03.07.2026** | Date to : நாள் வரை **03.07.2026**
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் **16.00 hrs** | Time to : நேரம் வரை **22.00 hrs**
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **04.07.2026** | Time : நேரம் **1230 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - II** | Time : நேரம் **1230 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : **கணினி தட்டச்சு**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **சுமார் 15 கி.மீ. மேற்கு**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி **பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம் கடலூர் மாவட்டம்.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **மு.அரவிந்தராஜ்**
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு ---
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **ஆய்வுக்குழு ஆய்வாளர் (அயல் பணி)**
(g) Address : முகவரி **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) கா.மருதுபாண்டியன், செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம்,
(2) சு.சுரேஷ், வயது (39), த/பெ ராமசாமி, Data Entry Operator, பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம்,
(3) மு.தமிழ்மாறன், (வயது 58), த/பெ கண்ணையன், அலுவலக உதவியாளர், பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

நான் இன்று 04.07.2026 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, மு.அரவிந்தராஜ், இளநிலை வருவாய் ஆய்வாளர், டி-பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், ஆய்வுக்குழு ஆய்வாளர் (அயல்பணி), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் மு.அரவிந்தராஜ் இளநிலை வருவாய் ஆய்வாளர், டி-பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், ஆய்வுக்குழு ஆய்வாளர் (அயல்பணி), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.IC1/361/2026 நாள் : 04.07.2026_ஐயா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகம் – கைப்பற்றப்பட்ட

(தொடர்ச்சி பக்கம்-3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

மு அரவிந்தராஜ் 04/07/26

04/07/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 04-07-2026 13.45 hrs.

Name: பெயர் P. ANBALAGAN
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police, VLR, Cuddalore

ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக – கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், டி பிரிவு, இளநிலை வருவாய் ஆய்வாளர், அயல் பணி ஆய்வுக்குழு ஆய்வாளராகிய மு.அரவிந்தராஜ் ஆகிய நான் 03.07.2026 ஆம் தேதி பணியிலிருந்த போது கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம், பேரூராட்சி அலுவலகத்தில், கட்டிட ஒப்பந்ததாரர்கள், பொது பயன்பாட்டு பொருட்களின் வினியோகஸ்தர்கள் ஆகியோர்களிடம் லஞ்சப்பணம் பெற்று வைத்துள்ளார்கள் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 15.00 மணிக்கு சென்று, அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் பி.அன்பழகன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேற்படி மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.00 மணிக்கு சென்றால் செயல் அலுவலர் அவர்களுக்கு கொடுக்க வைத்துள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 15.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு மேல்பட்டாம்பாக்கம் கம்போஸ் சாலையின் கிழக்கு மேற்காக அமைந்துள்ள சிமெண்ட் சாலையில் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 16.00 மணிக்கு தெற்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, கிழக்கு பார்த்தவாறு அமைந்து இருக்கும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலக கட்டிட வளாகத்திற்குள் சென்று பிரதான கதவை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலில் நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர்

04/07/2026

க.தமிழ்மாறன், வயது 58, த/பெ கண்ணையன் என்றும், கடந்த 32 ஆண்டுகளாக மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் செயல் அலுவர் குறித்து விசாரிக்க, அவர் செயல் அலுவலகர் திரு.மருதுபாண்டியன் அவர்கள் கடலூரில் உள்ள உதவி இயக்குநர் அவர்களை சந்திக்க சென்றுள்ளதாக தெரிவித்தார். மேலும் அலுவலகத்தின் இளநிலை உதவியாளர் சு.சுரேஷ் என்பவர் பவானிசாகர் அடிப்படை பயிற்சிக்கு சென்றுள்ளதாகவும், உதவி துப்புரவு ஆய்வாளர் பெ.ரமேஷ் என்பவர் 03.07.2026 தற்செயல் விடுப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். அவரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்யபோகும் விவரத்தை அவரிடம் தெரிவித்து, சோதனைக்கு உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவர் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். மேற்படி மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 15 க்கு 20 அடி நீள அகலமுள்ளது. பிரதான வாயிலை அடுத்து சுமார் 8 க்கு 10 அடி நீள அகலமுள்ள ஹாலின் இடதுபக்க பேரூராட்சி தலைவரின் அறை சுமார் 10 க்கு 10 நீள அகலமுள்ள அறையில் பேரூராட்சி தலைவரின் இருக்கை மற்றும் மேஜை அமைந்துள்ளது. அந்த அறையை சோதனை செய்ய கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. மேற்படி அறையின் நேர் எதிரே உள்ள அறை சுமார் 10க்கு 12 நீள அகலம் கொண்ட செயல் அலுவலர் திரு.கா.மருதுபாண்டியன் அவர்களின் அறை அமைந்துள்ளது. அந்த அறையில் செயல் அலுவலரின் இருக்கை மற்றும் மேஜை அமைந்துள்ளது. அந்த அறையில் இருந்த மேஜை டிராயரை சோதனை செய்ய வீனஸ் எலக்ரானிக்ஸ், Sri Lakshmi Auto Agencey மற்றும் ஓம் ஏஜென்சீஸ் என்ற நிறுவனங்களின் பூர்த்தி செய்யப்படாத பில்கள் இருந்தது. அந்த

04/07/2026

பில்கள் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலக ஹாலை அடுத்து சுமார் 20க்கு 30 நீள அகலமுள்ள ஹால் இருந்தது. அந்த ஹாலில் இருந்த நபர்களை விசாரித்தபோது, (1) R.சுரேஷ், த/பெ, ராமசாமி, டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் (தற்காலிக பணியாளர்) என்றும், (2) D.நகபாரதி, க/பெ.துரைராஜ், பரப்புரையாளர் (தற்காலிக பணியாளர்) என்றும், (3) A. கௌசல்யா, க/பெ.ஆனந்தன், பரப்புரையாளர் (தற்காலிக பணியாளர்) என்றும், (4) S.சிவராமன், த/பெ.சம்பத், Technical Assistant (தற்காலிக பணியாளர்) என்றும் தெரிவித்தனர். ஹாலின் இடதுபுறம் அமைக்கப் பெற்ற Cabin–ல் Technical Assistant திரு.சிவராமன் என்பவரின் மேஜை மற்றும் இருக்கையும், அதனை அடுத்து பரப்புரையாளர்கள் திருமதி.நவபாரதி மற்றும் திருமதி.கௌசல்யா ஆகியேர்களின் மேஜை மற்றும் இருக்கை அமைந்துள்ளது. மேற்படி மேஜை மற்றும் டிராயரை சோதனை செய்ய கைப்பற்றக்கூடிய பணமோ, பொருளோ இல்லை. மேற்படி ஹாலின் வலது வலதுபுறம் அமைக்கப்பெற்ற Cabin–ல் அலுவலக உதவியாளர் திரு.தமிழ்மாறன் என்பவரின் கணிப்பொறியுடன் கூடிய மேஜை மற்றும் இருக்கை அமைந்துள்ளது. மேற்படி மேஜை மற்றும் டிராயரை சோதனை செய்ய கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. மேற்படி இருக்கைக்கு பின்னால் இருந்த சுமார் 5½ அடி உயரம் கொண்ட இரும்பு பீரோவை அலுவலக உதவியாளர் முன்னிலையில் சோதனை செய்ய ரூ.76,648/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அலுவலக உதவியாளர் திரு.தமிழ்மாறன் என்பவரிடம் விசாரணை செய்ய 03.07.2026ந் தேதி வசூல் செய்யப்பட்ட வரிப்பணம் என்றும், இது குறித்து கணிப்பொறியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அது தொடர்பாக கணிப்பொறியை பார்வையிட்டதில் 03.07.2026ந் தேதி வரி வசூல் செய்யப்பட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.64,448/– என தெரிய வந்ததன்பேரில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. எனவே கூடுதலாக இருந்த ரூ.12,200/– பற்றி அலுவலக உதவியாளரிடம் விசாரணை செய்ய அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தினால் கூடுதலாக இருந்த ரூ.12,200/– பணம், லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட வரி

04/07/2026

வசூல் பட்டியல் பிரிதி எடுத்து விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. அதனை அடுத்து இளநிலை உதவியாளர் திரு.S.சுரேஷ் என்பவரின் இருக்கை அமைந்துள்ளது. அதனை சோதனை செய்ய கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. இளநிலை உதவியாளர் திரு.S.சுரேஷ் என்பவரை பற்றி அவர் கடந்த 30.06.2026ந் தேதி முதல் பவாணிசாகரில் பயிற்சியில் உள்ளார் என்று அலுவலக உதவியாளர் தெரிவித்தார். மேற்படி ஹாலின் இடது பக்கம் சுமார் 10க்கு 10 நீள அகலமுள்ள பதிவறை அமைந்துள்ளது. பதிவறையில் உள்ள நிலை அடுக்கு, அடுக்கு அலமாரி மற்றும் இரும்பு பீரோவை சோதனை செய்ய பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்த பதிவறையில் கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. மேற்படி பதிவறையை அடுத்து சுமார் 10க்கு 10 நீள அகலமுள்ள உதவி துப்புரவு ஆய்வாளர் திரு.ரமேஷ் என்பவரின் அறையில் போடப்பட்ட மேஜை மற்றும் இருக்கையை சோதனை செய்ய அதில் கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. மேற்படி துப்புரவு ஆய்வாளர் அறைக்கு அடுத்து சுமார் 10க்கு 10 நீள அகலமுள்ள இளநிலை பொறியாளர் (பொறுப்பு) திரு.கோபாலகிருஷ்ணன் என்பவரின் அறையில் போடப்பட்ட மேஜை மற்றும் இருக்கையை சோதனை செய்ய அதில் கைப்பற்றக்கூடிய பணமோ பொருளோ இல்லை. அதனை அடுத்து கழிவறை மற்றும் குளியலறை அமைந்துள்ளது. மேற்படி கழிவறைக்கு நேர் எதிரில் சுமார் 8க்கு 10 நீல அகலமுள்ள டேட்டா என்டரி ஆப்பரேட்டர் திரு.சுரேஷ் என்பவரின் அறை உள்ளது. அந்த அறையில் கணிப்பொறியுடன் கூடிய மேஜை மற்றும் இருக்கை அமைந்துள்ளது. மேற்படி அறையை சோதனை செய்ய கைப்பற்றக் கூடிய பணமோ பொருளோ இல்லை. மேலும் சுரேஷ் என்பவரின் செல்போனில் உள்ள G–Payவில் உள்ள பணப்பரிவர்த்தனையை பார்வையிட்டதில் சம்பத் என்பவரிடமிருந்து பலமுறை பணம் செலுத்தப்பட்டுள்ளது தெரியவந்தது. அது தொடர்பாக சுரேஷிடம் விசாரணை செய்ய விழுப்புரம், பக்கிரிபாளையத்தை சேர்ந்த அவரது நண்பர் சம்பத் என்பவர் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியில் குடிநீர் பைப்லைன் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை 01.04.2026 முதல் செய்து வருகிறார் என்றும், இந்த பணிகளை அவருக்கு ஒதுக்கீடு

04/07/2026

செய்ததற்காக சம்பத் என்பவர் செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் என்பவருக்கு கமிஷன் கொடுப்பார் என்றும், இந்த கமிஷன் தொகையை சம்பத், அவரது Google Pay No.9843194410–ல் இருந்து அவரது Google Pay No.9976992118–க்கும், அவரது மனைவி அனிதா Google Pay No.9360089348–க்கும் அனுப்புவார் என்றும், கமிஷன் தொகைகளை 1) 14.05.2026 – Rs.9,000/– 2) 03.07.2026 – Rs.48,000/– அவரது Google Pay No.9976992118–க்கும், 1) 10.06.2026 – Rs.19,500/–, 2) 15.06.2026 – Rs.18,740/–, 3) 03.07.2026 – Rs.18,750/– அவரது மனைவி அனிதா Google Pay No.9360089348–க்கும் என மொத்தம் ரூ.1,13,990/– அனுப்பினார் என்றும், இந்த தொகைகளை செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் அறிவுறுத்தியபடி, 1) 14.05.2026 – Rs.9,000/–, 2) 10.06.2026 – Rs.18,500/–, 3) 16.06.2026– Rs.18,700/–த்தை அலுவலக உதவியாளர் தமிழ்மாறன் என்பவரின் Google Pay No.9626847553–க்கு அவரது Google Pay No.9976992118–ல் இருந்து அனுப்பியதாக கூறினார். மேலும் செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் அவர்கள் பேரூராட்சி அலுவலகத்திற்கு 03.07.2026 காலை சுமார் 09.30 மணிக்கு வந்து சம்பத் அனுப்பிய கமிஷன் தொகையில் அவருக்கு சேர வேண்டிய ரூ.64,000/–த்தை பணமாக எடுத்து அலுவலக உதவியாளர் தமிழ்மாறன் ஒப்படைக்குமாறு கூறியதாகவும், அதன்படி சுரேஷ் 03.07.2026 ஆம் தேதி அவரது இந்தியன் வங்கி, மேல்பட்டாம்பாக்கம் கிளை, கணக்கு எண்.6478882847–ல் இருந்து ATM மூலம் ஐந்து முறை ரூ.10,000/– என மொத்தம் ரூ.50,000/– எடுத்தும், அவரது நண்பர் பரணி என்பவரின் Google Pay No.9677993745–க்கு ரூ.14,000/– அனுப்பி, அதனை அவரது ATM மூலமாக ரூ.14,000/–த்தையும் எடுத்தும், ஆக மொத்தம் ரூ.64,000/– பணத்தை 03.07.2026 பகல் சுமார் 12.00 மணிக்கு அலுவலக உதவியாளர் தமிழ்மாறனிடம் ஒப்படைத்ததாக கூறினார். அந்த பணத்தை அலுவலக உதவியாளர் தமிழ்மாறன் செயல் அலுவலர் அறைக்கு சென்று கொடுத்துவிட்டார் என்றும், பின்னர் சிறிது நேரத்தில் செயல் அலுவலர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு கடலூர் உதவி இயக்குநர் அலுவலகம் செல்வதாக கூறிவிட்டு சென்றுவிட்டார் என்று தெரிவித்தார். மேலும் சுரேஷ் என்பவரின்

04/07/2026

இந்தியன் வங்கி, மேல்பட்டாம்பாக்கம் கிளை, கணக்கு எண்.6478882847 –ன் 04.04.2026 முதல் 03.07.2026 வரையிலான வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி G–Pay பணபரிவர்த்தனை தொடர்பாக அலுவலக உதவியாளர் தமிழ்மாறனை விசாரணை செய்ததில் Data Entry Operator சுரேஷின் நண்பரான விழுப்புரம், பக்கிரிபாளையத்தை சேர்ந்த சம்பத் என்பவர் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியில் குடிநீர் பைப்லைன் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை 01.04.2026 முதல் செய்து வருகிறார் என்றும், இந்த பணிகளை அவருக்கு ஒதுக்கீடு செய்ததற்காக சம்பத் என்பவர் செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் என்பவருக்கு சுரேஷ் மற்றும் சுரேஷின் மனைவிக்கு Google Pay அனுப்பிய தொகைகளை செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் அறிவுறுத்தியபடி, 1) 14.05.2026 – Rs.9,000/–, 2) 10.06.2026 – Rs.18,500/–, 3) 16.06.2026– Rs.18,700/– த்தை Data Entry Operator சுரேஷ் என்பவரின் Google Pay No.9976992118–ல் இருந்து என்னுடைய Google Pay No.9626847553–க்கு அனுப்பினார் என்றும், அந்த தொகைகளை பணமாக எடுத்து, செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டதாகவும், மேலும் 03.07.2026 ஆம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு செயல் அலுவலர் திரு.மருதுபாண்டியன் அவர்கள் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து அலுவலகத்தில் இருந்த தன்னிடம், Data Entry Operator சுரேஷ் என்பவர் ரூ.64,000/– பணம் கொடுப்பார் என்றும், அதனை பெற்று தன்னிடம் ஒப்படைக்குமாறு சொன்னார் என்றும், அதன்படி 03.07.2026 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு Data Entry Operator சுரேஷ் கொடுத்த ரூ.64,000/– ரொக்கப் பணத்தை தான் வாங்கி செயல் அலுவலர் மருதுபாண்டியன் அவர்களிடம் கொடுத்ததாகவும், பின்னர் செயல் அலுவலர் அந்த பணத்துடன் உதவி இயக்குநர் அவர்களை சந்திக்க கடலூர் செல்வதாக கூறி சென்றுவிட்டார் என்று தெரிவித்தார். மேலும் அலுவலக உதவியாளர் தமிழ்மாறனின் கைப்பேசியில் இருந்த மேற்கண்ட இந்தியன் வங்கி, மேல்பட்டாம்பாக்கம் கிளை, கணக்கு

04/07/2026

எண்.520814940–ன் 13.05.2026 முதல் 03.07.2026 வரையிலான பரிவர்த்தனைகளை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டு, அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.12,200/– (500x18, 200x3, 100x26) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1) வருகை பதிவேடு–2026, 2) தனிநபர் ரொக்க பதிவேடு [இறுதியாக 12.12.2025 அன்று வரை மட்டுமே பதிவு உள்ளது] ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்தபோது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எந்தவித மன உளைச்சலும் ஏற்படுத்தும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே 03.07.2026 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு துவக்கப்பட்டு சுமார் 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. 03.07.2026ந்தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.12,200/–, (1) திரு.R.சுரேஷ், வயது (39), த/பெ. ராமசாமி, Data Entry Operator, பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம், கடலூர் மாவட்டம், (2) K.தமிழ்மாரன், (வயது 58), த/பெ. கண்ணையன், அலுவலக உதவியாளர், பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம், கடலூர் மாவட்டம் ஆகியோர்களது வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் (1) திரு.மருதுபாண்டியன், செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம், கடலூர் மாவட்டம் (2) திரு.R.சுரேஷ், வயது (39), த/பெ. ராமசாமி, Data Entry Operator, பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம், கடலூர் மாவட்டம், (3) K.தமிழ்மாறன், (வயது 58), த/பெ. கண்ணையன், அலுவலக உதவியாளர், பேரூராட்சி அலுவலகம், மேல்பட்டாம்பாக்கம்,

04/07/2026

கடலூர் மாவட்டம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம் xxxx) மு.அரவிந்தராஜ், இளநிலை வருவாய் ஆய்வாளர், டி–பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், ஆய்வுக்குழு ஆய்வாளர் (அயல்பணி), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 04.07.2026 at about 12.30 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti–Corruption Cr.No.4/2026, u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 04.07.2026 at 13.30 hours. sd/– xxxx 04/07/2026 (P.ANBALAGAN), Inspector of Police, V&AC, Cuddalore.

04/07/2026
(P. ANBALAGAN)
Inspector of Police
V&AC, Cuddalore.